கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

வழக்கு எண். OS. No. 110/2025 நாள்: 19.06.2026

<u>வா.சா.3 மீண்டும் இன்று அழைக்கப்பட்டு 1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வா.சா – 3 சொர்ணவள்ளி முன்னிலையானார். சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

<u>1ஆம் பிரதிவாதி தரப்பில் வா.சா.3 ஐ மீண்டும் இன்று அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, 1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

09.09.2016 ஆம் தேதியன்று எத்தனை பத்திரங்கள் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் 2,3 பத்திரங்கள் எழுதப்பட்டது. அந்த ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. வீட்டில் உள்ள அனைவரையும் தெரியும். 09.09.2016 ஆம் தேதிக்கு முன்னர் விவாகரத்து வழக்கு நிலுவையில் இருக்கும் போது முதல் திருமணத்தின் போது பிறந்த குழந்தைக்கு சொத்து கொடுக்க வேண்டும் என்று பேசிக்கொண்டார்களா என்றால் எனக்கு தெரியாது. எனது அக்கா 6 வருடங்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். 6 வருடங்களாக அவரை நான் 1ஆம் பிரதிவாதி வீட்டில்வைத்து பார்த்துக்கொண்டேன். எனது அக்காவை பராமரிக்க 1ஆம் பிரதிவாதி தொடர்ந்து பணம் கொடுத்து வந்தார் என்றும் எனது அக்கா இறந்த பின்னரும் 1ஆம் பிரதிவாதி எனக்கு சித்தி என்ற முறையில் பணம் கொடுத்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் தான் என்னை பார்த்து கொண்டார்.

01.09.2020 ஆம் தேதி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வாதியின் அம்மாவை நான் அழைத்து சென்றேனா என்றால் காரில் அழைத்து சென்ற போது நானும் அவருடன் சென்றேன். என் மகனும் உடன் வந்தார். மருத்துவ சிகிச்சைக்காக கூட்டி செல்லவதாக சொல்லிவிட்டு பத்திர அலுவலகத்திற்கு அழைத்து சென்றார்கள். காரிலிருந்து சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வாதியின் தாயார் நடந்து சென்றார். 01.09.2020 ஆம் தேதி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்ற விவரத்தை வாதியிடம் எப்போது சொன்னேன் என்றால் வாதியிடம் உடனே போன் மூலம் தகவல் சொன்னேன்.

1ஆம் பிரதிவாதியிடம் கணக்கு பிள்ளையாக வேலை பார்த்த கருப்பையா, ஐய்யப்பன் ஆகியோர் 1ஆம் பிரதிவாதிக்கு என்ன உறவு என்றால் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள். உறவு எதுவும் இல்லை. கையெழுத்து போட சொன்னால் போடுவார்கள். 1ஆம் பிரதிவாதியிடம் கணக்கு பிள்ளையாக வேலை பார்த்த கருப்பையா, ஐய்யப்பன் ஆகியோர் வாதி மற்றும் 1ஆம் பிரதிவாதிக்கு உறவினர் என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

தாவா சொத்து குறித்து பேச்சு வார்த்தை நடந்தது குறித்து என்னிடம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றும் சொன்னால் அவர்களாகவே பேசி கொள்வார்கள். வாதியை தொடர்ந்து தொந்தரவு செய்து அடித்ததால் அவர் புகார் கொடுத்தார். வாதி சொத்தில் தனக்குரிய பங்கை பிரித்து கொடுக்க வேண்டும் என்று கேட்டார். வாதியின் பங்கை தான் அவரின் மகனிற்கு எழுதி கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. வாதியின் பங்கை அவருடைய மகனிற்கு எழுதி ஆவணப்படுத்தி விட்டார்கள் என்றும் அந்த விவரம் தெரிந்தும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்து விஷயத்தில் என்னை தலையிட விடமாட்டார்கள். 1ஆம் பிரதிவாதி தொடர்ந்து பணம் கொடுத்து வந்தார் என்றும் என்னுடைய செயல்பாடு காரணமாக பணம் கொடுப்பதை நிறுத்தி விட்டார்என்றும் அதனால் 1ஆம் பிரதிவாதிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(1ஆம் பிரதிவாதி தரப்பிலான குறுக்கு விசாரணையை 2ஆம் பிரதிவாதி adopt செய்து கொள்கிறார்)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(Sd/- C. Sankar)
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.